



## திராவிட மாடல் அரசின் தொடர் முன்னெடுப்புகள் மூலம் மாணவிகளின் எதிர்காலம் உலக அளவில் சிறக்கட்டும்:

# கரண்டியைப் பிடுங்கிவிட்டு, புத்தகத்தைக் கொடுக்கச் சொன்னார் பெரியார்! நம் முதல்வர், புத்தகத்துடன் மடிக்கணினியையும் சேர்த்து வழங்குகிறார்!

## சென்னை, காயிதே மில்லத் கல்லூரி மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கி — துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,ஜன.15-

**சென்னை, காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு, `உலகம் உங்கள் கையில்' திட்டத்தின் கீழ் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 900 மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கி, வாழ்த்திப் பேசினார். முதற்கட்டமாக 20 மாணவிகளுக்கு வழங்கிய அவர், இந்த மடிக்கணினிகளை ஆக்கபூர்வமாகவும், புதுப்புது வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளும் வகையிலும், மாணவிகள் பயன்படுத்திட வேண்டும். திராவிட மாடல் அரசின் தொடர் முன்னெடுப்புகள் மூலம், நம் மாணவ, மாணவிகளின் எதிர்காலம் உலக அளவில் சிறக்கட்டும் என்று கூறி, பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.**

**மேலும் அவர், ``பெண்களுடைய கைகளில் இருக்கக்கூடிய சமையல் கரண்டியைப் பிடுங்கி, அவர்கள் கையில் புத்தகத்தைக் கொடுக்க வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். நம் முதலமைச்சர் புத்தகத்தை மட்டுமல்ல, இன்று மடிக்கணினிகளையும் சேர்த்து உங்கள் கைகளில் ஒப்படைத்திருக்கிறார். ஏனெனில், பெண்களுக்குக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தவர் நம் முதலமைச்சர் அவர்கள்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

உங்களையெல்லாம் சந்தித்து, இன்று இந்த மடிக்கணினி வழங்குவதில், உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில், இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளையும், பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உங்களின் சமூக அக்கறை

நம்முடைய காயிதே மில்லத் கல்லூரி மாணவிகளின் உற்சாகத்தையும், ஆரவாரத்தையும் பார்க்கும்போது உங்கள் மகிழ்ச்சி என்னையும் தொற்றிக்கொள்கிறது. காயிதே மில்லத் கல்லூரி மாணவிகளிடம் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் என்னவென்றால், உங்களின் சமூக அக்கறை. `கல்லூரிக்கு வந்தோம், படித்தோம், பட்டம் வாங்கினோம், வீட்டுக்குச் சென்றோம், வேலையில் சேர்ந்தோம்' என்று இல்லாமல், சமூக நலம் சார்ந்த பல்வேறு விஷயங்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கக்கூடியவர்கள்தான் இந்த காயிதே மில்லத் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளாகிய நீங்கள்.

### கல்லூரிக்கென்று தனி வரலாறு

பொதுவாகப் படித்து முடித்துவிட்டால், பெண்களுக்குத் தைரியமும் தன்னம்பிக்கையும் வந்துவிடும் என்று சொல்வார்கள். ஆனால், காயிதே மில்லத் கல்லூரி மாணவிகள் நீங்கள் படிக்கும்போதே எதையுமே துணிச்சலாகவும், தன்னம்பிக்கையுடனும் செய்யக்கூடியவர்கள். பல பேருக்கு முன்மாதிரியாகவும், ஊக்கமாகவும் இருக்கக்கூடிய மாணவிகள் நீங்கள். படிப்பில் மட்டுமன்றி, சமூக அக்கறையில் மட்டுமன்றி, விளையாட்டிலும் இக்கல்லூரி மாணவிகள் நிறைய சாதித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்தில் விளையாட்டுத் துறை அமைச்சராக உங்களுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப் பல பெருமைகள் வாய்ந்த கல்லூரி மாணவிகள் உங்களையெல்லாம் சந்தித்து இந்த மடிக்கணினியைக் கொடுப்பது உண்மையிலேயே இந்த அரசுக்குப் பெருமை, எங்களுக்குப் பெருமை.

இந்தக் கல்லூரிக்கென்று ஒரு தனி வரலாறு



உண்டு. 126 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்தக் கல்லூரி கல்விச் சேவையில் ஈடுபட்டு வருவதற்காக, என் வாழ்த்துகள். குறிப்பாக சென்னையில் இருக்கக்கூடிய ஏழை, எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்கு உயர்கல்வியைக் கொண்டுபோய் சேர்க்கின்ற பணியை இந்தக் கல்லூரி இத்தனை ஆண்டுகளாக மிகச் சிறப்பாகச் செய்து வருகிறது.

இந்தக் கல்லூரிக்கு 1974ஆம் ஆண்டு, நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தாம் `காயிதே மில்லத் கல்லூரி' என்று பெயர் வைத்தார்கள். அதுமட்டுமன்றி, இந்தக் கல்லூரிக்குப் புதிய கட்டடங்கள் வழங்கப்பட்டு, கலைஞர் அவர்கள்தாம் அவற்றைத் திறந்து வைத்தார்கள். பெயர் வைத்ததோடு நின்றுவிடாமல், இந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல உட்கட்டமைப்பு வசதிகள், கட்டடங்கள், என பல திட்டங்களை, கலைஞர் அவர்கள் கொடுத்தார். பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கட்டடம் உட்பட ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகளைக் கலைஞர் அவர்கள் இந்தக் கல்லூரிக்குச் செய்து கொடுத்திருக்கிறார்.

### 2.5 கோடி ரூபாயில் கட்டுமானப் பணிகள்

இன்று கலைஞர் வழியில் ஆட்சி செய்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தக் கல்லூரிக்குப் பல திட்டங்களைக் கொடுத்திருக்கிறார். சமீபத்தில் சுமார் 2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அந்தப் பணிகளையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார். அந்த வகையில், முதலமைச்சரின் உத்தரவுப்படி, இன்று இந்தக் கல்லூரிக்கு மடிக்கணினிகளை வழங்குவதற்கான வாய்ப்பை எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள்.

இந்தக் கல்லூரிக்கு வருவது எனக்கு ஒன்றும் முதல் முறை கிடையாது. இது புதிய இடமும் கிடையாது. பலமுறை வந்திருக்கிறேன். குறிப்பிட்டுக் கூற வேண்டுமென்றால், விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பாக சில மாதங்களுக்கு முன்பு உங்கள் கல்லூரிக்கு அருகில் இருக்கக்கூடிய முதலமைச்சரின் மினி ஸ்டேடியத்தை 3 கோடி ரூபாய் செலவில் நான்தான் திறந்து வைத்தேன். இப்போது இந்த மடிக்கணினிகளைக் கொடுக்க வந்திருக்கிறேன்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

இன்று ஒட்டுமொத்தமாக இந்தக் கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கக்கூடிய கிட்டத்தட்ட 900 மாணவிகளுக்கு இந்த மடிக்கணினிகளை வழங்க இருக்கிறோம். இந்த வருடம் மட்டும் நம் முதலமைச்சர் அவர்கள் 10 லட்சம் மடிக்கணினிகளை இறுதி ஆண்டு படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தைப் பற்றி உங்களுக்கே தெரிந்திருக்கும். இது முன்னர் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. முந்தைய ஆட்சியாளர்கள் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு வழங்கிக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு 2019ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். மீண்டும் இந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று அனைவரும் சொல்லும்போது நம்முடைய முதலமைச்சர் சொன்னார், ``பள்ளி மாணவர்களுக்குக் கொடுப்பதைவிடக் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுக்கும்போது அவர்களது படிப்புக்கும், வேலை வாய்ப்புக்கும் இது உதவியாக இருக்கும், நாளை எங்காவது வேலையில் சேர்ந்தாலும் உயர்கல்வித் துறைக்கு உதவியாக இருக்கும், ஏதோ ஒரு பெரிய நிறுவனங்களுக்குச் சென்று அவர்கள் வேலை தேடுவதற்கும், வேலை கிடைப்பதற்கும் இது பயனுள்ளதாக இருக்கும்" என்று இந்தத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

### மாணவர்களின் வளர்ச்சி

இந்த மடிக்கணினியின் தொழில்நுட்பமும் தரமும் எந்த வகையிலும் சமரசம் செய்யப்படக் கூடாது என்பதில் முதலமைச்சர் அவர்கள் உறுதியோடு இருந்தார்கள். அந்த அடிப்படையில் தான் இன்று நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட விப்ரோ (Wipro), ஏஸர் (Acer), டெல் (Dell) மடிக்கணினிகள் உங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன. இன்னும் பெருமையாகச் சொன்னால் `பெர்ப்ளெக்சிட்டி' (Perplexity) செயற்கை நுண்ணறிவு (AI) வசதியோடு இந்த மடிக்கணினிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கல்விக்கான நிதியை நம்முடைய திராவிட மாடல் அரசு வெறும் செலவாகப் பார்க்கவில்லை. நம்முடைய தமிழ்நாடு மாணவர்களின் வளர்ச்சிக்கான முதலீடாகத்தான் நம்முடைய அரசு இதைப் பார்க்கிறது.

### பெண்களுக்குக் கல்வி

பெண்களுடைய கைகளில் இருக்கக்கூடிய சமையல் கரண்டியைப் பிடுங்கி, அவர்கள் கையில் புத்தகத்தைக் கொடுக்க வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார். நம்முடைய முதலமைச்சர் புத்தகத்தை மட்டுமல்ல, இன்று மடிக்கணினிகளையும் சேர்த்து உங்கள் கைகளில் ஒப்படைத்திருக்கிறார். ஏனெனில், பெண்களுக்குக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

பெண்களின் கல்வியை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் முதலமைச்சர் அவர்கள் `புதுமைப் பெண்' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அரசுப் பள்ளியில் படித்துக் கல்லூரியில் பயிலப்போகும் மாணவிகள், அது எந்தக் கல்லூரியாக இருந்தாலும் சரி, தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, ``பெண்கள் படிக்க வேண்டும், மகளிருக்குக் கல்வி முக்கியம், படிக்கச் சென்றால் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை நான் தருகிறேன்" என்று இன்று புதுமைப் பெண் திட்டத்தை நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தக் காயிதே மில்லத் கல்லூரியில் மட்டும் சுமார் 2,500 மாணவிகள் புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாகப் பயனடைந்திருக்கிறீர்கள்.

`நான் முதல்வன்' திட்டத்தையும் நம் அரசு செயல்படுத்துகிறது. இன்று இந்த நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக இந்தக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 7,000 பேருக்குத் திறன் மேம்பாடு மற்றும் திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இன்று மடிக்கணினி வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில், உங்களின் திறனை மேலும் வளர்க்கின்ற ஒரு நிகழ்வாக இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பெரிய பெரிய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு நிச்சயம் இந்த மடிக்கணினி உங்களுக்கு உதவியாக இருக்கும்.

மடிக்கணினியை நிச்சயம் யூடியூப் பார்ப்பதற்கும், படம் பார்ப்பதற்கும், விளையாடுவதற்கும் மட்டும் பயன்படுத்தாமல், தயவுசெய்து, இதனை உங்களுடைய கல்விக்காக ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துங்கள் என்று இந்த நேரத்தில் ஒரு கனிவான வேண்டுகோளை வைக்கிறேன். உங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்காக இதனைப் பயன்படுத்துங்கள். எதனைக் கொடுத்தாலும் அதனைப் பாதுகாத்துப் பன்மடங்கு ஆக்கக்கூடிய ஆற்றல் பெண்களாகிய உங்களுக்கு உண்டு. அந்த வகையில், இன்று உங்கள் கையில் கொடுக்கப்படுகின்ற இந்த மடிக்கணினி, எதிர்காலத்தில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வளர்ச்சியாகப் பெருகும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

### தேர்ச்சி விகிதம்

எந்தத் தேர்வாக இருந்தாலும், மாணவர்களைவிட மாணவிகளாகிய நீங்கள்தாம் எப்பொழுதுமே தேர்ச்சி விகிதத்திலும், முதல் வகுப்புத் தேர்ச்சியிலும் மாணவர்களை எளிதாக மிஞ்சிவிடுகிறீர்கள். அதேபோல இந்த மடிக்கணினியைப் பயன்படுத்தி வாழ்க்கையிலும் நீங்கள் ஆண்களைவிடச் சிறந்த இடத்திற்கு வந்து, சாதனைகள் படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைத் தவிர இன்னும் பல்வேறு திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு உங்களுக்கு வழங்க இருக்கிறது. எனவே, இந்த அரசுக்கு எப்பொழுதும் நீங்கள் துணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மடிக்கணினி பெற்ற உங்கள் அனைவரின் எதிர்காலமும் சிறக்க அரசின் சார்பாக என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன், கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி ஐ.ஏ.எஸ்., இணை இயக்குநர் முனைவர் ராமன், கல்லூரியின் முதல்வர் முனைவர் நா.ரமா, மாமன்ற உறுப்பினர் சிவ.ராஜசேகரன், கழக நிர்வாகிகள் கௌதமன், நிவேதா ஜெசிகா, கென்னடி, வி.எஸ்.கலை, விஜய், பிரபாகரன், அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் உள்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க உள்ள உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மற்றும் விழாக்கமிட்டியினர்,பொதுமக்கள், அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் உள்ளனர்.





விருதுநகரில் நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டை வெற்றியடையச் செய்வது தொடர்பான மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ஜி.பி.ராஜா, தாட்கோ தலைவர் இளையராஜா ஆகியோர் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.இளங்கோ ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் குமரேசன், வெற்றிச்செல்வன், ஐயப்பன், அன்புச்செல்வன், மருதுராஜா, வன்னி முத்துப்பாண்டி உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள், இளைஞர் அணியினர் திரளாக பங்கேற்றனர்.